**மத்திய கலாச்சார நிதியம் - 2020**

மத்திய கலாச்சார நிதியத்தின் 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் மீது இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லல் வேண்டும். அந்த அதிகார சட்டத்தின் பிரிவு 16(2) பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாக நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்கள், விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதி ஒன்றுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் குறிப்பிட்ட காலத்தினுள் தயாரித்தல் மேற்கொள்ளப்படுகின்றது என உறுதிப்படுத்தல் வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு உரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். அவ்வாறாயினும், 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கம் கொண்ட பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 மற்றும் 2004 பெப்ரவரி 24 திகதிய 01/2004 இலக்கம் கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம், கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2018, 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கான நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பணிப்பாளர் நாயகத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 57 இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தின் பிரிவு 4(ஈ) | நிருவாக சபையினால் அல்லது சபையினால் ஆவணம் ஒன்றின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட பணிப்பாளர் நாயகத்தினால் நிதியம் சார்பாக உடன்படிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான அதிகாரக் கையளிப்பு | இந்தக் காலப் பகுதியில் மத்திய கலாச்சார நிதியத்தின் பணிப்பாளர் நாயகப் பதவியில் ஒருவரும் காணப்படாமையால் பணிப்பாளர் நாயகத்திற்கு பதிலாக இந்த ஒப்பந்த உடன்படிக்கைகளுக்கு பிரதான நிருவாக உத்தியோகத்தர் கையொப்பமிட்டிருந்தார். | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொண்டிருக்காத நிதியத்தின் பிரதான நிருவாக உத்தியோகத்தரினால் ரூபா 6,527,400 தொகைக்கான ஒப்பந்த வேலை ஒன்றிற்கான உடன்படிக்கை ஒன்றிற்கு கையொப்பமிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவுகள் 2(1) மற்றும் 102 | நிதியம் வருமான வரி விடுதலை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், வருமான வரிக்காக பதிவு செய்யப்பட்டு 2018/2019, 2019/2020 மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக வருமானவரி செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1980 இன் 57 இலக்க மத்திய கலாச்சார நிதிய சட்டத்தின் பிரிவு 11(2) இன் படி 1979 இன் 28 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரி ஒன்றிலிருந்து நிதியம் விடுவிக்கப்பட்டுள்ளது. மத்திய கலாச்சார நிதியச் சட்டம் அனைத்து வருமான வரி சட்டங்களில் இருந்தும் விடுவிக்கப்படக் கூடிய விதமாக திருத்திக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | 1987 இன் 03 இலக்க பொது ஒப்பந்த வேலைச் சட்டத்தின் உப பிரிவுகள் 6(1)(அ) மற்றும் 12 | பொது ஒப்பந்த வேலைகள் பதிவாளரிடம் பதிவு செய்யப்படாத ஒப்பந்தக்காரருக்கு 2015 முதல் 2019 ஆண்டு வரை நிதியத்தினால் கூட்டுத்தொகை ரூபா 2,132,384,064 இற்கான நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தன. | இணங்குகின்றேன். அப்போது இருந்த நிருவாக ஆணையகம் 1987 இன் 03 இலக்க பொது ஒப்பந்த வேலை சட்டத்திற்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை என ஏற்றுக்கொள்வதுடன், எதிர் காலத்தில் கணக்காய்வினால் சுட்டிக்காட்டியுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது ஒப்பந்த வேலை சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | | |
| | (i) அத்தியாயம் II இன் பந்தி 1.7 | அங்கீகாரம் பெற்றிருக்காத ''பணிப்பாளர்'' பதவிகள் 08 இற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு பணிப்பாளருக்கு உரிய மாதாந்த கொடுப்பனவு உட்பட சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள 06 உத்தியோகத்தர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளது. மீதியான பணிப்பாளர் இருவரும் சேவையின் தேவைப்பாட்டின் படி நிருவாக சபையின் அங்கீகாரத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) அத்தியாயம் II இன் பந்தி 1.3 | முகாமைத்துவ சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் ''பதவியணியினர் அங்கீகரித்தல்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இலக்கம் DMS/E1/54/9/241 மற்றும் 2011 ஜூலை 21 | இணங்குகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 06 பதவிகளில் இரு உத்தியோகத்தர்களின் சேவை தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளது. மீதியான 04 பதவிகளுக்காக சேவையின் தேவைப்பாட்டின் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக மாத்திரம் தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி ஊழியர்கள் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய கடிதத்திற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக புதிய பதவிகள் ஏற்படுத்துவதற்கு மற்றும் 2011 ஜூன் 30 திகதியின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாத 12 பதவிகளுக்காக சேர்க்கப்பட்ட 06 உத்தியோகத்தர்களின் பதவிப் பெயர்கள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்படாத பதவிகளாக இருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்களுக்கு 2020 ஜனவரி முதல் 2020 ஜூன் வரை கூட்டுத்தொகை ரூபா 1,161,740 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மீது நிருவாக சபையின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. | எடுக்கப்பட வேண்டும். |
| (iii) அத்தியாயம் II இன் பந்தி 9.1 மற்றும் 2018 பெப்ரவரி 20 திகதிய 03/2018 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | பணிப்பாளர், (நிருவாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) அபேகம விஷேட செயற்திட்ட பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் (நிருவாக) இன் பிரத்தியேக உதவியாளர் ஆகிய பதவிகளுக்காக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்காக அமைச்சரவையின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் அமர்த்தும் போது நிருவாக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. நிதியத்தின் மீள்கட்டமைப்புச் செயற்பாடு அங்கீகரிக்கப்படும் வரை பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவம்) அவர்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்காக 213 வது நிருவாக சபைக் கூட்டத்தில் தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. | தாபனக் கோவையின் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (உ) 2003 ஜூன் 02 திகதிய PED-12 கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) பந்தி 4.2.6 | 2020 காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தாக்கம் காரணமாக 2020 காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாமல் போனது. | செயலாற்றுகை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எடுக்க வேண்டும். |
| (ii) | பந்தி 6.5.3 | 2016, 2017 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2022 ஜனவரி 31 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2016, 2017 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் திருத்தப்பட்ட அமைச்சரவை குறிப்புக்கள் 2022/01/06 திகதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த அறிக்கைகள் சபையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 1997 பெப்ரவரி 03 திகதிய 06/97 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி 02 | 06 மாதங்கள் பதில் கடமை காலத்தை மிகைத்துள்ள 72 பதில் கடமை நியமனங்களின் வெற்றிடங்களை நிரப்பாமல் தொடர்ச்சியாக பதில் கடமை அடிப்படையிலேயே நடாத்திச் செல்லப்பட்டுள்ளது. | நிதியத்தின் மீள் கட்டமைப்புச் செய்பாடுகளின்படி தற்போது ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டு வருகின்றமையால் அதனை அங்கீகரித்த பின்னர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (எ) | 2009 ஏப்ரல் 19 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 02.1 மற்றும் 2009 ஜூன் 17 திகதிய 09/2009(1) இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | i. உள்வருதல் வெளிச்செல்லல் என்பவற்றை உறுதிப்படுத்தாமல் 06 உத்தியோகத்தர்களுக்கு 2019 ஜூன் முதல் 2020 ஜூலை வரை சம்பளமாக ரூபா 1,338,051 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பிரிவுத் தலைவர்களின் கூட்டத்தின் மூலம் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு அறிவுருத்தி உள்ளகச் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. தற்போது உத்தியோகத்தர்கள் விரல் அடையால இயந்திரத்தில் மற்றும் கையொப்ப பதிவேட்டில் கையொப்பமிடல் மேற்கொள்ளப்படுகின்றது. | சேவையில் ஈடுபடுதலை உறுதிப்படுத்தாத கொடுப்பனவுகளை திருப்பி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | | ii. 2019 ஜூன் 11 திகதி வேலையை ஒப்புக்கொண்டு அத் திகதி முதல் கடமைக்கு வராதிருந்த பணிப்பாளர் ஒருவருக்கு 03 மாத கால சம்பளமாக ரூபா 192,772 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | குறிப்பிட்ட செலுத்தப்பட்ட சம்பளத்தை திருப்பி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | | iii. அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்று காணப்படாத போதிலும் சர்வதேச அலுவல்கள் பணிபாளர் என 2020 பெப்ரவரி மாதம் முதல் நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு அத்திகதி முதல் ஒக்தோபர் மாதம் வரை நிதியத்தின் எதுவித கருமங்களும் மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன், பிரதமர் அலுவலகத்தில் கடமையாற்றியதாக சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் | பதவிக்காக நிருவாக சபைப் பத்திர இலக்கம் 212.24.1 இன் மூலம் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது. அதன்படி, வேதனம் செலுத்தப்பட்டது. பிரதமரின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட நாட்கள் இதற்காக அடிப்படையாக கொள்ளப்பட்டது. | சேவையில் ஈடுபடுத்துதலை உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவுகளை திருப்பி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஒன்றினை அடிப்படையாக கொண்டு 09 மாதங்களுக்கான சம்பளமாக ரூபா 1,214,284 தொகை நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | |

**2.2 செயற்பாட்டுத் செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தின் 2019 பாதீட்டு மதிப்பீட்டின் படி மாணவர் அறநெறி இல்ல நாடளாவிய நிகழ்ச்சித் திட்டத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,140 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், பொருளாதார வசதியீனங்களையுடைய மற்றும் போதியளவு கட்டிடம் ஒன்று காணப்படாத 332 அறநெறிப் பாடசாலைகளுக்கு, கட்டிடம் ஒன்றிற்கு ரூபா 3,433,734 தொகை என்ற அடிப்படையில் ஒரே கட்டிட வரைபின் படி கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு 2019 ஒக்தோபர் 30 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டு நன்கொடையாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) பெறுகை வழிகாட்டல் 2.14.1 இன் படி ரூபா 250 மில்லியனை மிகைக்கும் பெறுகைகள் அமைச்சரவை பெறுகைக் குழுவின் மூலம் செயற்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,140 மில்லியனிற்கான இந்த நிகழ்ச்சித் திட்டம் அமைச்சரவை பெறுகைக்குழுவின் மூலம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மாணவர் அறநெறி இல்ல நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிருவாகக் குழுவினால் பத்திர இலக்கம் 208.57.1 இன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. பெறுகையின் மொத்த பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு 2019 ஆண்டின் போது பெறுகையை அமைச்சரவைக்கு சமர்பபிப்பதற்காக அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டது. அங்கு நிர்மாண வேலையின் முன்னேற்றம், நிருவாக சபையின் தீர்மானம் மற்றும் அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட அமைச்சின் நிரந்தர பெறுகைக் குழுவின் தீர்மானம் ஆகிய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து விஞ்ஞாபனத்தை மீண்டும் சமர்ப்பிக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டலின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிகழ்ச்சித் திட்டத்தின் 03 கட்டங்களின் கீழ் நிர்மாண வேலைகள் பெறுகை வழிகாட்டலின் 3.1.6 இற்கு முரணாக நேர் ஒப்பந்த முறையின் கீழ் ஒரு கட்டிடம் ரூபா 3,484,500 தொகை ஆக கட்டிடத் திணைக்களம், அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண வேலைக் கூட்டுத்தாபனத்திற்கு முறையே கட்டிடங்கள் 45, 112 மற்றும் 211 வீதம் சாட்டப்பட்டிருந்தது. 03 கட்டங்களின் கீழ் இந்த 368 கட்டிடங்களுக்கான நிர்மாண வேலைக்காக ரூபா 1,282.2 மில்லியன் ஏற்பாடுகள் தேவைப்பட்டது. அது அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளை ரூபா 142.2 மில்லியனினால் மிகைத்திருந்தது. | நி.பி. 787 இன் படி கட்டிடத் திணைக்களத்திற்கு நேரடியாக நிர்மாண வேலைகள் சாட்டுதல் செய்வதற்கு இயலுமை ஒன்று காணப்பட்டது. அமப/15/0219/620/001-1 மற்றும் 2015.04.02 திகதிய அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டலின் படி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டு வரையறையுள் செயற்திட்டங்களை நெறிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நிர்மாண வேலை அலுவல்கள் சாட்டப்பட்டிருந்த 03 நிறுவனங்களுக்கு 2019 ஒக்தோபர் 30 திகதி வரை 298 கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 753,500,000 இற்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த முற்பணத் தொகையில் ரூபா 28,326,073 தொகையும், அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த முற்பணத் தொகையில் ரூபா 68,861,887 தொகை மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண வேலைகள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த முற்பணத் தொகையில் ரூபா 221,932,662 தொகையும் தீர்த்திருக்கவில்லை. | கட்டிடத் திணைக்களத்தினால் இதுவரை 45 கட்டிடங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 278.7 மில்லியனிற்கான தொகையை மிகைத்து வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 65 கட்டிடங்கள் சரியாக ஏற்றுக்கொண்டிருந்ததுடன் மற்றும் 21 கட்டிடங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. மீதியான 26 கட்டிடங்களில் 65% பௌதீக முன்னேற்றம் காட்டப்படுகின்றது. அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணவேலை கூட்டுத்தாபனத்திற்கு முற்பணமாக வழங்கியிருந்த ரூபா 353.3 மில்லியனிற்கான தொகையை மிகைத்து வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 44 கட்டிடங்கள் சரியாக ஏற்றுக்கொண்டும் 123 கட்டிடங்கள் 93% பௌதீக முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது. மீதியான 44 கட்டிடங்களின் முன்னேற்றம் 10% முதல் 21% இடையே காணப்பட்டது. | முற்பணங்களை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iv) இரண்டாம் கட்டத்தின் கீழ் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண வேலைக் கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்த ரூபா 428,593,500 தொகைக்கான பெறுமதிக்கான 123 கட்டிடங்களின் 77 கட்டிடங்களின் நிர்மாணவேலை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 299,667,000 தொகை பெறுமதியான 86 கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் சாட்டப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகளின் முன்னேற்றத்தை காட்டக்கூடிய அறிக்கைகள் தயாரித்திருக்காமையால் எத்தனை எண்ணிக்கையான கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததென இனங்காண முடியாதிருந்தது. | அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த 112 கட்டிடங்களில் 65 கட்டிடங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், 21 கட்டிடங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. மீதியான 26 கட்டிடங்களில் 65% பௌதீக முன்னேற்றம் ஒன்றினை காட்டுகின்றது. | நிர்மாண வேலை நிறுவனங்கள் கடப்பாடு ஏற்படக்கூடிய விதமாக உடன்படிக்கைகளுக்கு அனுகுவதற்கும் உரிய முறையில் அறிக்கைகள் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) மூன்றாம் கட்டத்தின் கீழ் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண வேலை கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்த ரூபா 97,566,000 தொகைக்கான 88 கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்த 26 கட்டிடங்களின் நிர்மாண வேலை பாதியில் நிறுத்தி விடப்பட்டிருந்தது. | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண வேலை கூட்டுத்தாபனம் 211 கட்டிடங்களில் 44 கட்டிடங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மீதியான 123 கட்டிடங்களின் 93% பௌதீக முன்னேற்றம் காட்டப்பட்டதுன், மீதியான 44 இன் முன்னேற்றம் 10% முதல் 26% இடையே காணப்பட்டது. | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளக் கூடியவாறு மற்றும் நிர்மாண வேலை நிறுவனங்கள் கடப்பாடுகளுக்கு உட்படக்கூடியவாறு உடன்படிக்கைகளுக்கு அனுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 2017 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை ஏனைய கலாச்சார செயற்பாடுகளுக்காக 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது முறையே ரூபாா 519,546,178 தொகை, ரூபா 121,427,616 தொகை, ரூபா 387,947,025 தொகை மற்றும் ரூபா 7,681,849 தொகையாக மொத்தம் ரூபா 1,036,602,668 தொகை செலவிடப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) அங்கீகரிக்கப்பட்ட தொகையில் 49 பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு 2017 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை விடுவிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 178,968,648 தொகையாகும். அத் தொகையில் | ஏனைய கலாச்சார செயற்பாடுகளுக்காக பணம் விடுவிக்கும் போது விடயம் தொடர்பாக அறிவுடைய தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு | நிதியத்தை சிறந்த முகாமைத்துவத்துடன், பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 146,538,215 தொகை அந்த அலுவலகங்களினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், மீதி ஏற்பாடுகள் ரூபா 32,430,433 தொகையில் ரூபா 21,743,656 தொகை நிதியத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. இந்த தொகையில் 03 பிரதேச செயலகங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 2,682,297 தொகை பணம் ஏதும் பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | |
| | (ii) 05 பிரதேச செயலகங்கள் மற்றும் 04 மாவட்ட செயலகங்களினால் 01 வருடம் முதல் 06 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் ரூபா 10,406,602 தொகையான அந்த மீதித் தொகை பொது வைப்புக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்ட பணத்தை திருப்பி அனுப்பும் படி குறிப்பிட்ட பிரதேச செயலகங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இவற்றில் ஒரு பகுதியை நிதியத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பொது வைப்புக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தொகைகளை மீண்டும் நிதியத்திற்கு பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நெல்லிகல சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தின் ஓய்வு மண்டபம் ரூபா 98,590,000 இற்கான மதிப்பீட்டுக் கிரயத்தில் நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆரம்ப மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 124,022,750 தொகை வரை 25 சதவீதத்தினால் அதிகரித்து காணப்பட்டது. இலங்கை கடற்படையினால் 2019 பெப்ரவரி மாதம் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த இதன் 2021 மார்ச் வரை பௌதீக நிர்மாண வேலை முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நெல்லிகல சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தின் ஓய்வு மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 98,590,000 தொகையொன்று உழைப்பு கிரயத்துடன் மதிப்பீடு செய்யப்பட்டது. அரசாங்கக் கொள்கையின் படி இந்த நிர்மாண வேலை இலங்கை கடற்படைக்கு ஒப்படைக்கும் அடிப்படை மீது இந்த ரூபா 98,590,000 தொகையுள் காணப்படும் கூலிக் கிரயத்தை அகற்றிய பின்னர் மேலும், செலவு குறைக்கப்படல் நேரிட்டிருந்தது. குறிப்பிட்ட மூலப்பொருட்கள் கடற்படைக்கு ஒப்படைக்கப்பட்டது பெறுகை செயற்பாடுகள் கடைபிடித்த பின்னர் ஆகும். செயற்திட்டத்தின் மீதியான வேலைகள் பிரதான பிக்குவினால் பூர்த்தி செய்து கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான திட்டமிடலுடன் மற்றும் ஒருங்கிணைப்புடன் மற்றும் அரச பெறுகை வழிகாட்டல்களின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | வாத்துவ, தம்பியகம ஸ்ரீ ஸமுத்ராராம விகாரையின் மூன்று மாடி துறவிகள் இருப்பிட கட்டிடம் நிர்மாணிப்பது தொடர்பாக தனியார் வரைபு தயாரிக்கும் நிறுவனம் ஒன்றினால் 2017 மார்ச் 20 திகதி தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 35,000,000 தொகைக்கான மதிப்பீட்டின் படி கழுத்துறை மாவட்ட செயலாளருக்கு 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது ரூபா 27,521,531 தொகை வழங்கப்பட்டிருந்தது. கழுத்துறை | அவதானிப்பு சரியானது. பிரதேச செயலாளரினால் குறிப்பிட்ட கொடுப்பனவிற்கான அங்கீகாரம் வழங்க முன்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரை மற்றும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளரின் பரிந்துரை பெற்றுக்கொண்டிருந்தது. அதன் காரணமாக மாவட்ட செயலாளரினால் பிரதேச செயலாளருக்கு பணம் விடுவித்தல் மேற்கொள்ளப்பட்ட போதிலும், | பொருத்தமான திட்டமிடலுடன் மற்றும் ஒருங்கிணைப்புடன் நிதியத்தை நெறிப்படுத்துவதற்கு மற்றும் செயற்திட்டத்தை செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்ட செயலாளரினால் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வை மற்றும் சான்றுபடுத்துதல் மூலம் நிர்மாண வேலைகளின் பௌதீக முன்னேற்றம், தரம் தொடர்பாக உறுதிப்பாடு ஒன்றை பெற்றுக்கொள்ளாமல் பானந்துறை பிரதேச செயலாளருக்கு கிடைத்திருந்த முழுத் தொகையையும் 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்தது. அந்த தொகையில் ரூபா 2,276,814 தொகை 2020 திசெம்பர் 12 திகதி முதல் 2021 பெப்ரவரி 11 திகதி வரை பானந்துறை பிரதேச செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் காணப்பட்டது. நிர்மாண வேலைகளின் முன்னேற்றத்தை பரிசோதனை செய்வதற்கு மற்றும் மீதி வேலைக்கு தேவையான நிதியை வழங்கி கட்டடத்தை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு ஆக்குவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதன் கொடுப்பனவுப் பொறுப்பு பிரதேச செயலாளருக்கே காணப்பட்டது. தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் நிர்மாண வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அளவைப் பத்திரம் மற்றும் கொடுப்பனவு அறிக்கை பரிந்துரைக்கப்பட்டிருந்தது. கொவிட் நிலைமை மீது நிர்மாண வேலைகள் தாமதம் அடைந்து காணப்பட்ட போதிலும் தற்போது அதன் நிர்மாண அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |
| (உ) | ஹபரகட ஶ்ரீ விஜயானந்த புரான ரஜமஹா விகாரையின் துறவிகள் இருப்பிடம் நிர்மாணிப்பதற்கான மதிப்பீடு ரூபா 7,345,000 தொகையாக இருந்ததுடன், 04 கட்டங்களில் 03 கட்டங்களுக்காக ரூபா 4,478,253 தொகை தவலம பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை 2018 மே 28 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் வரை நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், ரூபா 4,436,227 தொகை செயற்பட வேண்டியிருந்தது. | அவதானிப்புக்கள் சரியானது. தற்போது இந்த நிர்மாண வேலையின் 85மூ பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இந்த வருட இறுதியில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2020/2021 கொவிட நிலைமை காரணமாக நிதியம் ஈடுபடுத்த முடியாமையால் அலுவல்கள் தாமதம் அடைந்திருந்தது. | பொருத்தமான திட்டமிடலுடன் மற்றும் ஒருங்கிணைப்புடன் நிதியத்தை நெறிப்படுத்துவதற்கு மற்றும் செயற்திட்டத்தை செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கிரம கல்டெம்கொட புரான விகாரையின் துறவிகள் இருப்பிடம், தாது மண்டபம் மற்றும் நூலகத்திற்காக கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2019 ஜூன் 19 திகதி நிருவாக சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கு முன்னர் 2019 மே 02 திகதி மதிப்பீட்டுத் தொகையில் 20 சதவீதம் அதாவது ரூபா 5,577,800 தொகை முதலாம் தவணையாக ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. வழங்கப்பட்டிருந்த ரூபா 5,577,800 தொகை கட்டம் I எனக் கணித்து | 2020 / 2021 ஆண்டுகளில் வருமானங்கள் இழப்புக் காரணமாக இந்த நிர்மாண வேலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எனினும், இந்த நிர்மாண வேலையை பலனற்ற செலவொன்று ஆவதற்கு இடமளிக்காது 2022 ஆண்டில் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டு கிடைக்கக்கூடிய நிதியத்தின் மீது முகாமைத்துவப்படுத்தி விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருத்தமான திட்டமிடலுடன் மற்றும் ஒருங்கிணைப்புடன் நிதியத்தை நெறிப்படுத்துவதற்கு மற்றும் செயற்திட்டத்தை செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மதிப்பீடு தயாரித்து தனியார் ஒப்பந்தக்காரரிடம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இந்த கட்டத்தின் ஒதுக்கீடு பெறுகை வழிகாட்டலின் 4.4 இற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக அல்லது வழங்கப்பட்டிருந்த ரூபா 5,577,800 தொகை தொடர்பாக நிதியத்தினால் தொடர் செயல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், குறிப்பிட்ட தொகையில் மீதியாக காணப்பட்ட ரூபா 681,924 தொகை 2021 மார்ச் வரை மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. நிதியம் வழங்கப்படாமையால் நிர்மாண வேலை பாதியளவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், செலவிடப்பட்ட தொகையும் பயனற்ற செலவொன்றாக இருந்தது.

(எ) காலி வித்தியாலோக பிரிவேனா மஹா விகாரையின் அறநெறிப் பாடசாலை மற்றும் தர்மகூடக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக காலி மாவட்ட பொறியியலாளரின் (கட்டிடங்கள்) ரூபா 24,233,100 இற்கான மதிப்பீட்டின் மீது மூலப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 768,000 தொகை விகாரைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் நிர்மாண வேலைக்காக இலங்கை கடற்படைக்கு முதலாவது பண விடுவித்தல் என 2019 ஆகஸ்ட் 19 திகதி ரூபா 4,693,020 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிருவாக சபையின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. நிர்மாண வேலை தொடர்பாக 2018 ஜுலை 18 திகதியில் உள்ளவாறு புத்தசாசன அமைச்சின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியம் மற்றும் மாகாண சபை ஏற்பாடுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைகளின் பெறுமதி ரூபா 2,800,000 தொகையாக காணப்பட்டதுடன், மொத்த மதிப்பீட்டுப் பெறுமதியில் அதுவரை மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகளின் பெறுமதியை கழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கடற்படையினால் விகாரை வளவில் தேவாலய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அதன் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதம் என

இந்த நிர்மாண வேலையை மாவட்ட செயலகத்திற்கு வழங்குவதற்காக நிருவாக சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.
மூலப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக விகாரையின் நம்பிக்கையாளர்கள் சபைக்கு ரூபா 768,000 தொகை மாவட்ட செயலாளரின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது.
விகாரையினுடைய நம்பிக்கை பொறுப்பு சபை விகாரையின் நிருவாக சபையாக காணப்படுகின்றமையால் ஒப்பந்த வேலைகள் மேற்கொள்வதற்குரிய அதிகாரத்துடனான அலகு ஒன்றென திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட கட்டிடத்திற்காக 2016.06.25 திகதி அடிக்கல் நாட்டப்பட்டதுடன் அந்தக் கட்டிடத்தின் சில நிர்மாண வேலைகள் புத்த சாசன அமைச்சின் உதவியின் மீது மேற்கொள்ளப்பட்டிருந்தது.
குறிப்பிட்ட நிர்மாண வேலைக்காக விகாராதிபதி அவர்களின் கோறிக்கையின் படி பிரதமரின் பரிந்துரையுடன் நிதியத்தினால் மீதி வேலைகளுக்கான மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது தனவந்தர்களின் உதவியுடன் நிர்மாண வேலை அலுவல்களில்

பொருத்தமான திட்டமிடலுடன் மற்றும் ஒருங்கிணைப்புடன் நிதியத்தை நெறிப்படுத்துவதற்கு மற்றும் செயற்திட்டத்தை செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | அறிவிக்கப்பட்டிருந்ததுடன், இந்த நிர்மாண வேலை தர்மகூட கட்டிடம் நிர்மாணிக்கும் மதிப்பீட்டிற்கு புறம்பாக நிர்மாணவேலை ஒன்றாக காணப்பட்டது. தர்மகூட கட்டிடம் மீதியான நிர்மாண வேலைகளுக்காக ரூபா 18,772,080 தொகை தேவைப்படுகின்றது என கடற்படைத் தளபதியினால் 2020 ஜூன் 08 திகதி அறிவித்திருந்த போதிலும், அதற்குரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமையால் நிர்மாண வேலை அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், நிர்மாண வேலைகளின் முன்னேற்றம் 60 சதவீதம் மாத்திரமாக காணப்பட்டது. | கூடுதலான பௌதீக முன்னேற்றத்தை பெற்று வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஏ) | 2010 நவம்பர் 20 திகதிய இலக்கம் பீஎப்/4/சீஎம்/I(Cir) இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வதற்காக தேவையான முறைமைகள் ஏற்படுத்த வேண்டியிருந்த போதிலும் சீகிரிய செயற்திட்டம் தவிர ஏனைய செயற்திட்டங்களில் இணையத்தினூடாக அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு 2021 ஒக்தோபர் 30 திகதி அளவிலும் முடியாமல் இருந்தது. | மத்திய கலாச்சார நிலையத்தின் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்காக கணக்குகளின் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் நடைமுறை ஒன்று மக்கள் வங்கியுடன் இணைந்து அனைத்து வருமானங்கள் உழைக்கும் செயற்திட்டங்களுடன் செயற்படுத்துவதற்காக தற்போது அனைத்து திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளது. | வினைத்திறனுடன் வருமானம் உழைக்கும் முறைகள் கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | கடமை நாட்களில் பண்டக் கணிப்பீட்டு சபையினால் மேற்கொள்ளப்படும் பண்டக் கணிப்பீட்டு அலுவல்களுக்காக நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் மீது ஒரு நாளைக்கு நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,000 மற்றும் நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தர்களுக்காக ரூபா 750 தொகை வீதம் கூட்டுத்தொகை ரூபா 1,666,692 தொகை 2019 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அலுவல்களிற்காக திறைசேரியின் அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | முறையான அங்கீகாரத்துடன் மாத்திரம் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1980 இன் 57 இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தினை காலத்திற்கு உகந்தவாறு திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1980 இன் 57 இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தினை காலத்திற்கு உகந்தவாறு திருத்தங்கள் மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சட்டத்தை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதியம் ஆரம்பிக்கப்பட்ட 1980 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட 32 பிரதேச செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 15 செயற்திட்டங்கள் 2015 முதல் 2018 வரை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2015 ஆண்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த 10 செயற்திட்டங்களுக்காக நிருவாக சபை, திறைசேரி மற்றும் ஏனைய அங்கீகாரங்கள் பெற்றுக்கொண்டிருக்காததுடன், அங்கீகாரம் பெற்றிருந்த 05 செயற்திட்டங்களில் 03 ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் பணிப்பொறுப்புக்கள் செயற்பாட்டுத் திட்டங்களுக்கு மற்றும் பாதீட்டுக்கு உட்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | புதிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கும் போது திட்டங்களில் மற்றும் பாதீட்டில் உட்படுத்துவதற்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2017 மே 26 திகதிய இலக்கம் 202.25.01 கொண்ட நிருவாக சபை பத்திரத்திற்கு கிடைத்திருந்த அங்கீகாரத்தின் மீது கொழும்பு, பௌத்தாலோக மாவத்தை, இலக்கம் 212/1 என்ற இடத்தில் அமைந்துள்ள நிதியத்தின் தலைமை அலுவலகம் 2018 மார்ச் 01 திகதி முதல் பத்தரமுல்ல செத்திரிபாய II கட்டத்தின் 04 மாடியில் (5823 சதுர அடியில்) நிறுவப்பட்டிருந்தது. அதன்படி, 2021 ஏப்ரல் 30 திகதி வரை அந்த வளாகத்தில் தலைமை அலுவலகம் நடாத்தப்பட்டு வந்ததுடன், அதற்காக கட்டிட வாடகையாக ரூபா 65,862,757 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், எதிர்பார்த்தவாறு புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்கு அல்லது தற்போது காணப்படும் கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்கு | நிதியத்தின் பிரதான வருமான வழி முடங்கிய காரணத்தினால் பத்தரமுல்ல செத்சிரிபாய காரியாலய வளாகத்தின் மாதாந்த வாடகையை செலுத்துவதற்கு முடியாமல் போன காரணத்தினால் பழைய அலுவலக வளாகத்திற்கு இந்த தலைமை அலுவலகத்தை கொண்டு வருவதற்கு நேரிட்டது. பௌதாலோக மாவத்தை அலுவலக வளாகத்தின் உரிமையை உரித்தாக்குவதற்கான சட்ட நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. அதேபோல் அந்த புதிய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ஆரம்ப வரைபுகள் தயாரித்தலும் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. | நிர்மாணித்தல் சிறந்த முறையில் திட்டமிடுவதற்கும் நிதியத்தின் நிருவாகம் உரிய முறையில் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 04 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் பழைய கட்டிடத்திற்கு 2021 மார்ச் மாதம் முதல் தலைமை அலுவலகம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2011 பெப்ரவரி 02 திகதிய அமப/11/0/169/555/004 இலக்கம் கொண்ட தீர்மானத்திற்கு இணங்க நிதியம் உழைத்துள்ள வருமானத்தில் 25 சதவீதம் தொல்பொருள் ஸ்தானங்களை நடாத்திச் செல்வதற்காக தேசிய மரபுரிமை தொடர்பான அமைச்சிற்கு வழங்க வேண்டியிருந்த போதிலும், 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் செலுத்த வேண்டியிருந்த ரூபா 764,254,863 தொகை, ரூபா 571,273,485 தொகை, ரூபா 213,778,942 தொகை மற்றும் ரூபா 210,779,543 தொகை ஆக மொத்தம் ரூபா 1,760,086,783 தொகை அமைச்சிற்கு வழங்கியிருக்கவில்லை. | குறிப்பிட்ட ஆண்டுகளில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் படி 02 பிரதான செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு நேரிட்டிருந்தமையால் உழைக்கப்பட்ட வருமானத்தில் 25% தொல்பொருளியல் திணைக்களத்திற்கு வழங்க முடியாமல் போனது. 2022 ஆண்டு முதல் திறைசேரியின் இணக்கம் மற்றும் மேற்பார்வையின் கீழ் ஆரம்ப வருமானத்தில் நிருவாகச் செலவினை கழித்த பின்னர் மீதித் தொகையில் 25% தொல்பொருளியல் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | சசுநோதய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 03 கட்டங்களின் கீழ் 2017 முதல் 2018 மே 20 திகதி வரை 20 மாவட்டங்களில் அமைந்துள்ள 1049 விகாரைகள் மற்றும் மத ஸ்தானங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 526,341,581 தொகை செலவிடப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) கட்டம் I இன் கீழ் 150 விகாரைகளுக்கு ரூபா 46,486,385 தொகை 2017 ஆகஸ்ட் 15 திகதி வழங்கப்பட்டிருந்தது. நிலையப் பொறுப்பதிகாரி (பண்டுவஸ்நுவர) தொடர் நடவடிக்கை அறிக்கைக்கு இணங்க அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு அலுவல்கள் ஆரம்பிக்கப்படாத 09 விகாரைகள் காணப்பட்டதுடன், அலுவல்கள் பூர்த்தி செய்யப்படாத 07 விகாரைகளும் காணப்பட்டன. அந்த விகாரைக்கு செலுத்தப்பட்டிருந்த நிதி உதவிகள் முறையே ரூபா 2,743,585 தொகை மற்றும் ரூபா 2,504,315 தொகை காணப்பட்டது. | முதலாம் கட்டத்தின் கீழ் தம்பதெனிய, யாப்பகுவ, பொலன்னறுவ, மொனராகல, பண்டுவஸ்நுவர ஆகிய செயற்திட்டங்களுக்குரிய அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு அலுவல்கள் ஆரம்பிக்கப்படாத 09 விகாரைகள் மற்றும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்படாத 07 விகாரைகள் தொடர்பாக சுட்டிக் காட்டியுள்ள விடயங்கள் சரியானவையே. தொடர் நடவடிக்கை அறிக்கை கிடைத்தவுடனே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | உகந்த திட்டமிடலுடன் நிதியத்தை நெறிப்படுத்துவதற்கு மற்றும் செயற்திட்டங்களை தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |
| | (ii) கட்டம் II இன் கீழ் 815 மத ஸ்தானங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 405,439,004 | கட்டம் II இன் கீழ் தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு செயத்திட்ட முகாமையாளர்களுக்கு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தொகை 2017 திசெம்பர் 04 திகதி வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் தொடர்பாக வழங்கியிருந்த தொடர் நடவடிக்கை அறிக்கையின் படி 14 மத ஸ்தானங்களில் அபிவிருத்தி விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், 45 மத ஸ்தானங்களில் அபிவிருத்தி விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்காக வழங்கியிருந்த நிதி உதவித் தொகை முறையே ரூபா 6,995,876 தொகை மற்றும் ரூபா 22,445,810 தொகையாக இருந்தது. 09 மத ஸ்தானங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 4,500,000 இற்கான நிதி உதவியினை பயன்டுத்தி வேறு கருமங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | சாட்டப்பட்டதுடன், அறிவிக்கப்பட்டவுடனே தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | |
| (iii) | கட்டம் III இன் கீழ் தம்பதெனிய செயற்திட்டத்திற்கு உரிய 34 மத ஸ்தானங்கள் பண்டுவஸ்நுவர செயற்திட்டத்திற்குரிய 19 மத ஸ்தானங்கள் என்பன தெரிவுப் பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்ட 53 மத ஸ்தானங்களுக்காக ரூபா 500,000 வீதம் கூட்டுத்தொகை ரூபா 26,500,000 உதவித்தொகை வழங்கப்பட்டிருந்தது. உதவித் தொகை வழங்கப்பட்ட 53 மத ஸ்தானங்களுக்காக கோவைகள் பேணப்பட்டு வந்து அல்லது மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவல்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை அறிக்கை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | இது தொடர்பாக தொடர் நடவடிக்கை அலுவல்கள் மேற்கொண்டு குறிப்பிட்ட அறிக்கைகள் வழங்கும் படி பணிப்பாளர்களுக்கு சாட்டப்பட்டிருந்தது. அந்த அறிக்கைகள் கிடைத்ததுடன், அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கருணையுடன் தெரிவிக்கின்றேன். | வழங்கியிருந்த நிதியம் மற்றும் செயற்திட்ட தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 பெறுகை முகாமைத்துவம்**

----------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் தலைமை அலுவலகத்திற்கு மற்றும் பத்தரமுல்ல அபேகம வளாகத்திற்கு பாதுகாப்புச் சேவை பெற்றுக்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டல் 7.12.1 இற்கு முரணாக விலைகூறல் சமர்ப்பித்திருந்த ஒரே கம்பனியில் இருந்து பாதுகாப்புச் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | 2010 ஆகஸ்ட் 12 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் படி அரசுக்குச் சொந்தமான சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திடம் வினவியிருந்த போதிலும் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. | பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தாக்கத்தினால் அழிவடைந்த கட்டுவாப்பிடிய புனித செபஸ்டியன் ஆலயத்தை மீள்நிர்மாணித்தல் தொடர்பாக செலவு ரூபா 13,407,480 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த புனர்நிர்மாணம் தரைப்படை உழைப்பு வழங்குதல் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், விடயத்தை பூர்த்தி செய்தல் நிதியத்தின் அல்லது வெளி உசாத்துணை நிறுவனம் ஒன்றின் ஒழுங்குறுத்தல் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆலயத்தின் அறநெறிப் பாடசாலையின் கட்டிடம் மற்றும் உள்ளக நுழைவுப் பாதை நிர்மாணித்தல் மற்றும் மின் பிறப்பாக்கி ஒன்று பொறுத்துதல் என்பவற்றிற்காக ரூபா 49,961,750 இற்கான (வரியுடன்) கிரயம் மதிப்பீட்டுடனான ஒப்பந்த வேலை பெறுகை வழிகாட்டல் 3.1.6 இற்கு முரணாக தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு நேர் ஒப்பந்த வேலை என சாட்டப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனத்தினால் அதே தினத்தில் மேற்கூறிய செயற்திட்டத்தை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு துணை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பெறுகை அலுவல்கள் பூர்வாங்க திட்டமிடலின் மூலம் மற்றும் போதியளவு ஏற்பாடுகள் காணப்படுகின்றன என உறுதிப்படுத்திய பின்னர் மாத்திரம் ஆரம்பிக்க வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்காமையால் ஏற்பாடுகள் இன்மையால் அறநெறிப்பாடசாலை கட்டிட நிர்மாண வேலை நிறுத்தப்பட்டிருந்தது. | இலக்கம் அ.ம.ப. 19/3086/122/066-1 மற்றும் 2019.11.05 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அணவல் செய்யப்படாததுடன், உகந்த திட்டமிடலுடன் நிதியத்தை நெறிப்படுத்துவதற்கு மற்றும் செயற்திட்டத்தை செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | திஸ்ஸ மஹாராம, தெபரவெவ ஸ்ரீ விசுத்தாராம விகாரை துறவிகள் இருப்பிட கட்டிடம் நிர்மாணிப்பதற்காக கட்டிட திணைக்களம் ரூபா 96,920,505 இற்கான மதிப்பீடொன்று தயாரித்திருந்ததுடன், அதன் முதற் கட்டமாக ரூபா 6,527,400 தொகை பெறுமதியான நிர்மாண வேலைகள் பெறுகை வழிகாட்டல் 3.1.6 இற்கு முரணாக 2019 நவம்பர் 05 திகதி அ.ம.ப. 19/3086/122/066-1 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மாணத்தின் படி தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு நேர் ஒப்பந்தவேலை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. | தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு நேர் ஒப்பந்த வேலை வழங்குவதற்காக கிடைக்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் படி துறவிகள் இருப்பிடக் கட்டிடத்தின் நிர்மாண வேலைச் செயற்திட்டம் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு நேரடியாக சாட்டப்பட்டது. 2020/2021 ஆண்டுகளின் போது நிதியம் முகங்கொடுத்திருந்த நிதி நெருக்கடி மீது நிர்மாண வேலை தாமதம் ஆகின. அனுப்பப்பட்டிருந்த முன்னேற்ற அறிக்கையின் படி தற்போது இந்த செயற்திட்டத்தின் | அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அணவல் செய்யப்பட்ட காலத்தை மிகைத்துள்ளது. உகந்த கூட்டிணைவுடன் மற்றும் அரச பெறுகை வழிகாட்டலின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறிப்பிட்ட நிர்மாண வேலைக்காக 2019 ஆகஸ்ட் 27 திகதி உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் ரூபா 4,487,361 தொகை அதாவது முதலாம் கட்டத்தின் ஒப்பந்தப் பெறுமதியில் 79 சதவீதம் நிர்மாண வேலை நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த முதல் கட்டத்தின் நிர்மாண வேலைகள் 2019 பெப்ரவரி 18 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 மே 18 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என உடன்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியாகிய 2021 திசெம்பர் 31 திகதி வரை நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண வேலைகள் 85% அளவு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | |

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் DMS/E1/54/9/241 கொண்ட 2011 ஜுலை 21 திகதி மற்றும் 2011 நவம்பர் 22 திகதி கடிதங்கள் மற்றும் இலக்கம் DMS/1731 Vol-1 கொண்ட 2017 ஏப்ரல் 28 திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைத் திணைக்களம், நிதியத்திற்காக சிரேஷ்ட மட்ட 16 பதவிகள், மூன்றாம் மட்ட 46 பதவிகள், இரண்டாம் மட்ட 478 பதவிகள், ஆரம்ப மட்ட 2,468 ஆக 3,008 பதவியணி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிரேஷ்ட மட்ட 05 பதவிகள். மூன்றாம் மட்ட 19 பதவிகள், இரண்டாம் மட்ட 144 பதவிகள், ஆரம்ப மட்ட 662 ஆக 830 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், இரண்டாம் மட்டத்தில் 69 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்ட 77 பதவிகள் என 146 பதவிகள் மிகையாக காணப்பட்டது. | மத்திய கலாசார நிதியத்தில் தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி வெற்றிடமாகக் காணப்படும் பதவிகளுக்காக உள்ளகத்தினால் தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கி அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி வெற்றிடங்கள் நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 பெப்ரவரி 14 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்காக கணக்காய்வுத் திகதியாகிய 2022 பெப்ரவரி 28 திகதி வரை முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை தயாரிக்கப்பட்டு வருவதுடன் அது முடிவடைந்த உடனே முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் II பிரிவு 1.2 இற்கு இணங்க புதிய பதவிகள் ஏற்படுத்துவதற்கு அல்லது பதவியணியை அதிகரிப்பதற்காக முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் நிதியத்தின் அல்லது தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளில் அடங்கியிருக்காத 2,271 காவலாளிகள் மற்றும் 1,130 தொழிலாளிகள் என 3,401 ஊழியர்கள் தொல்பொருளியல் திணைக்களத்திற்காக சேர்த்துக் கொள்வதற்கு 2017 ஒக்தோபர் 17 திகதி நிர்வாகசபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் படி 2019 செப்தெம்பர் 30 திகதி வரை தொல்பொருளியல் உதவியாளர்கள் (தொழிலாளர்கள்) 934 மற்றும் காவலாளிகள் 553 ஆக மொத்தம் 1,487 நிதியத்திற்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. இவ்வாறு ஏனைய அரச திணைக்களம் ஒன்றிற்காக சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்கு 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கு முறையே ரூபா 479,356,993 தொகை, ரூபா 581,773,108 தொகை மற்றும் ரூபா 123,499,165 தொகை நிதியத்தினால் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | தொல்பொருளியல் திணைக்களத்திற்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்த தொல்பொருளியல் உதவியாளர்கள் மற்றும் காவலாளிகள் அனைவரினதும் சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் இன்றி ஏனைய திணைக்களம் ஒன்றிற்காக ஊழியர்கள் சேர்க்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். |
| (ஈ) | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி ஆட்சேர்க்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களுக்காக 2016 ஒப்தோபர் 27 ஆந் திகதிய 01/2015(I) இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 3.3 இணங்க மாதாந்தம் போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 50,000 வீதம் மற்றும் எரிபொருள் கொடுப்பனவு ரூபா 16,440 வீதம் 2019 ஜனவரி முதல் 2020 திசெம்பர் வரை ரூபா 1,921,251 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தாபன அலுவல்கள் விரிவடைதலின் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி போதியளவாக காணப்படாமையால் இவ்வாறு அமைய அடிப்படையில் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள நேரிட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணான கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 03 பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரிமையில்லாத உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களுக்காக பயன்படுத்தப்பட்ட | இங்கு குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களில் ஒருவர் மாத்திரமே கடமையில் ஈடுபட்டிருக்கின்றார். ஏனைய உத்தியோகத்தர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டது. | - மேற்படி - |

எரிபொருள் 12,629.27 லீற்றர்களுக்காக ரூபா 1,312,222 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**2.6 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் வெளிக்கொண்டுவந்த விடயங்கள் | | |
| i. சீகிரிய மேற்கு நுழைவாயிலுக்கு அண்மையில் காணப்படும் சிற்றுண்டிச்சாலை 2016 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை ஒன்றின் படி மாதாந்தம் ரூபா 130,000 வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், மீண்டும் உடன்படிக்கை மேற்கொள்ளாமல் அதே வாடகைக்கு 2017, 2018 2019 ஆண்டுகளின் போதும் வழங்கப்பட்டிருந்தது. 2019 மார்ச் முதல் திசெம்பர் வரை நிலுவை வாடகை மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 1,303,366 தொகை வாடகை பெறுனரிடம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதற்காக உரிய நிலுவை வாடகை மற்றும் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டப் பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ளது. தற்போது சிற்றுண்டிச்சாலை புதிய பெறுவோன் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொண்டு சுற்றுலாதாரர்களுக்கு தேவையான சேவைகள் வழங்கப்படல் மேற்கொள்ளப்படுகின்றது. | சேவைகளுக்காக வருடாந்தம் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளல் மற்றும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.. |
| ii. 2019 ஆண்டின் போது நிதியத்தினால் மஹாவிஹாரை மற்றும் சேதவன செயற்திட்டத்திற்காக பாரிய எண்ணிக்கையான தொழிலாளர்கள் மாதாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்ததுடன், முறையே 35,478 மற்றும் 36,389 கொண்ட மனித நாட்களில் 10,599 தொகை மற்றும் 16,264 தொகை பயனேறுமின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மஹாவிஹாரை மற்றும் சேதவன செயற்திட்டத்திற்காக தொழிலாளர் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்த முறையே ரூபா 69,685,545 இல் மற்றும் ரூபா 64,423,509 இல் ரூபா 20,816,436 தொகை மற்றும் ரூபா 28,787,280 தொகை விளைவற்ற கொடுப்பனவு காரணமாக நிதியத்திற்கு ரூபா 49,603,714 இற்கான நட்டம் ஏற்பட்டிருந்தது. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். | விளைவற்ற ஊழியர்களை ஈடுபடுத்துவதை தவிர்ப்பதற்கும் செலவுகளை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக மாத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றிருக்காத 10 கணக்கு உத்தியோகத்தர் பதவிக்காக 02 வருட ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு 2016 நவம்பர் 25 திகதி 199 ஆம் இலக்க நிர்வாக சபை கூட்டத்தில் அந்த பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், நியமனங்கள் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் மீது நடைபெற்றிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் போதியளவாக காணப்படாமையால் பதவிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாறு பதவிகளின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்படும் வரை சேவையின் தேவை காரணமாக புதிய செயற்திட்டங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் கணக்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பதற்கு நேரிட்டது. | வெளிப்படை தன்மையுடன் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iv. | ஸ்ரீ தலதா மாளிகைக்கு அண்மையில் அமைந்துள்ள நிதியத்திற்கு சொந்தமான சர்வதேச தகவல் நிலையக் கட்டிடம் ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளரின் இலக்கம் PS/DSP/RAU/01/10/KP மற்றும் 2017 ஜூலை 14 திகதிய கோரிக்கையின் படி 2017 ஜூலை 23 முதல் 2017 ஆகஸ்ட் 16 வரையான காலப்பகுதிக்கான கண்டி ஸ்ரீ பத்தினி தேவாலயத்தின் தேவைப்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கட்டிடத்தை திருப்பி நிதியத்திற்கு ஒப்படைப்பதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த கட்டிடத்தில் அமைந்துள்ள தகவல் நிலையத்தின் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்கு இலவசமாக தகவல் வழங்கல், இலவசமான கண் காது நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல், கலாச்சாரத்துடன் சேர்ந்த புத்தகங்கள் மற்றும் உருவங்கள் விற்பனை செய்தல், இலங்கை கலாச்சார மரபுரிமையுடன் சேர்ந்த கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல் ஆகிய சேவைகள் சுமார் 4½ வருட காலமாக வழங்க முடியாதுள்ளது. மேலும் குறிப்பிட்ட கட்டிடத்தில் காணப்படும் ரூபா 05 மில்லியனை விட பெறுமதி வாய்ந்தது என குறிப்பிடப்படும் நிதியத்தின் சொத்துக்களும் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | இந்தக் கட்டிடம் மீண்டும் மத்திய கலாச்சார நிதியத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சொத்துக்களின் பாதுகாப்பு பொருத்தமான பயன்பாடு, குறிக்கோள்களை நெருங்குதல் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| v. பொலன்னறுவ செயற்திட்ட அலுவலகத்தினால் மரபுரிமை முகாமைத்துவ செயற்பாட்டு நிலையம் நிர்மாணிக்கும் கருமம் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது வடிவமைத்து நிர்மாணிக்கும் அடிப்படையின் மீது ரூபா 38,926,902 இற்காக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பணியகம் 2018 செப்தெம்பர் 06 திகதி ஒப்பந்த வேலை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் 2019 மார்ச் 20 திகதியே உடன்படிக்கை கையொப்பமிட்டிருந்தது. உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் 2018 செப்தெம்பர் 07 திகதி பெறுகை வழிகாட்டல் 5.4.4 இற்கு முரணாக ரூபா 8,953,188 அதாவது 23 சதவீத வேலை ஆயத்தப்படுத்துவதற்கான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாண வேலையின் ஆரம்ப வடிவமைப்பு மாற்றப்பட்டிருந்த போதிலும் அதற்காக பெறுகை வழிகாட்டல் 8.13.4 இற்கு இணங்க குறிப்பிட்ட ஆணையகத்தில் இருந்து அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன். | பெறுகை வழிகாட்டலின் படி மற்றும் சிக்கனத்துடன் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| vi. 2001 ஆண்டு முதல் இது வரை கடலாதெனிய விஹாரையின் சிலையின் பாதுகாப்பிற்காக நிரந்தர கூரை ஒன்று தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமையால் அதிலுள்ள ஓவியங்கள் அழிவடையக் கூடிய ஆபத்து நிலைமை ஒன்று முகங்கொடுத்திருந்ததுடன், நிர்மாண வேலைகளின் கட்டமைப்பு சார் அறிக்கைக்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 645,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த வரைபிற்காக தொல்பொருளியல் ஆலோசகர்களின் அங்கீகாரம் வழங்கியிருக்காமையால் குறிப்பிட்ட செலவுகள் விளைவற்ற செலவாக மாறியுள்ளது. விஹாரைக்காக 24 மணித்தியால பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள தற்காலிக கூரையின் பாதுகாப்பிற்காக 2010 முதல் 2020 வரை 24 காவலாளிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், | தற்போது இதன் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த அனைத்து காவலாளிகளும் நிதியத்தின் ஏனைய வேலைத் தளங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பாதுகாப்புத் தன்மைக்கும் விளைவற்ற செலவுகளைத் தவிர்ப்பதற்காகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதற்கான சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு என மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ரூபா 15,244,100 தொகை ஆகும். | | |
| vii. நிதியத்திற்கு சொந்தமாக தொல்பொருளியல் உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள், கட்டிடக் கலை உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலாளர்கள் காணப்படும் போது சேதவன நூதனசாலையின் புனர்நிர்மாண வேலைக்காக ரூபா 44,592,080 இற்கான (வெட் உடன்) ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், அதன் உசாத்துணை சேவைகள் ரூபா 2,326,541 தொகைக்காக பட்டய கட்டிடக் கலை கலைஞர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது. ஒப்பந்தவேலைக்காக ஒப்பந்தகாரருடன் முறையான உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்காததுடன், 268 நாட்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த விடயம் ஒரு வருடத்திற்கும் மிகையான காலம் கடந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2022 பெப்ரவரி 28 திகதி வரை கருமம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து நிர்மாண வேலைகளுக்குமாக பெறுகை வழிகாட்டலின் படி உசாத்துணை சேவைகள் பெற்றுக் கொள்ளக் கூடிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மூலம் இந்தக் கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என அறிவிக்கின்றேன். இந்த ஒப்பந்த வேலையின் இறுதிக் கொடுப்பனவு இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தாமதக் கட்டணம் இறுதிக் கொடுப்பனவின் போது சீராக்கல் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன அறிவிக்கின்றேன். | நிர்மாண வேலை நிறுவனத்துக்கு கடப்பாடு ஏற்படக் கூடிய வகையில் உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கும் சிக்கனத்துடன் பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| viii. சேதவன செயற்திட்டத்தில் காணப்பட்ட கப் வண்டி ஒன்று, முச்சக்கர வண்டிகள் 02 மற்றும் டிரக்டர் வண்டிகள் 03 இற்காக 2019 ஆம் ஆண்டில் எரிபொருளுக்காக ரூபா 3,191,122 மற்றும் செயற்திட்டத்தின் உபசரிப்பு செலவுக்காக ரூபா 1,677,167 தொகையாக மிகையாக செலவீடு செய்யப்பட்டிருந்தது. | தற்போது நிதியத்தின் நிதிக் கட்டுப்பாடு முறைப் பிரகாரம் நடாத்திச் செல்வதற்கு வேலைத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தி அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செலவுக் கட்டுப்பாட்டிற்காக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |